சொல்வயல்

திங்கள் மின்னிதழ்

சொல்வளமே மொழிவளம் நெல்வளமே நாட்டின்வளம்

" சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுப்பீடம்"
(திருவிளையாடற்புராணம்–
தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்)

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு

வயல் : 7 விளைச்சல் : 70 திருவள்ளுவர் ஆண்டு 2057, கும்பம் (மாசி) – மார்ச்சு – 2026

- பால்பண்ணை மேம்பாட்டுத்துறைக் கலைச்சொற்கள்
- தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'முகு'
- சொற்குவையின் தோற்றுவாய்
  பேரா. வ.அய்.சுப்பிரமணியம்
- நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்... தொடர்ச்சி
- தமிழிய (திராவிட) மொழிக்குடும்ப ஒப்பிலக்கணம்
- மஸ்து
- பனிநீர்க் கலனும் வெந்நீர்க் கலனும்
- இயக்ககச் செயற்பாடு

பால் பண்ணை மேம்பாட்டுத் துறைக் கலைச்சொற்கள்

Balanced feed	– சம ஊட்டத் தீனி	Hand fed calves	– வளர்ப்புக் கன்றுகள்
Breeding bull	– பொலி காளை	Lactometer	– பால்மானி
Calf pens	– கன்றுத் தொழுவம்	Lactone milk	– செயற்கைப் பால்
Calving lines	– கன்று ஈனகம்	Milk can	– பால் கலம்
Cattled shed	– கால்நடைத் தொழுவம்	Milk filter	– பால் வடிகட்டி
Chilling centre	– குளிரூட்டகம்	Milking yard	– கறவையிடம்
Cross breeding	– கலப்பினப் பெருக்கம்	Milking time	– கறவை நேரம்
Cold storage	– குளிர் வைப்பறை	Milk weighting room	– பால் எடை அறை
Dung bin	– சாணத் தொட்டி	Pail	– பால் குவளை
Farm manager	– பண்ணை மேலாளர்	Skim milk	– வெண்ணெய் நீக்கிய பால்
Gestation period	– சினைக் காலம்	Suckling calve	– ஊட்டும் கன்று
Grazing land	– மேய்ச்சல் நிலம்	Toned milk	– குறைகொழுப்புப் பால்
Lactation period	– கறவைக் காலம்		

சொற்குவை (sorkuvai.tn.gov.in) வலைத்தளத்தில் தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் பார்த்துப் பயன்கொள்ளலாம்.

சொல்வயல்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2057, கும்பம் (மாசி) மார்ச்சு – 2026

ஆசிரியர்	:	திருமதி க. பவானி இயக்குநர் (மு.கூ.பொ.)
பொறுப்பாசிரியர்	:	முனைவர் வே. கார்த்தி
இதழ்க்குழு	:	திரு. கி. இராமர் திரு. ஏ. காந்தி திருமதி. க. கத்தூரி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
முதல் தளம், நகராட்சி நிருவாக அலுவலகக் கட்டடம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.
மின்னஞ்சல் : solvayal@gmail.com
வலைத்தளம் : www.sorkuvai.tn.gov.in

Directorate of Tamil Etymological Dictionary Project,
First floor, Urban Administrative office Campus,
No : 75 , Santhome high Road,
MRC Nagar, Chennai–28
Mail id : solvayal@gmail.com
Website : www.sorkuvai.tn.gov.in

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'முகு'

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'முகு' எனும் சொல்லிலிருந்து பல சொற்கள் கிளைத்து வளர்ந்த முறையினைக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

முகு

முகம் = தலையின் முன்பக்கம், முன்பக்கம்
முகர் = முகம், முகவுருவுள்ள முத்திரை
முகரா = ஒரு நாணயம்
முகரை = முகம்
திருமுகம் = முத்திரையுள்ள மடல்
முகத்திரை = முத்திரை
முகத்திரம் = கணையாழி (மோதிரம்)
முகம் – முகன் – முகனை – மோனை = சீரின் முன்னெழுத்து
முகப்பு = முன்பக்கம்.
துறைமுகம் = நிலத்தின் முன்பக்கமான நெய்தல் நகர்
முகம் – நுகம்
முகம் = முன்புறம், பக்கம்
முகிழ் = முன்தோன்றும் அரும்பு, குவி, தோன்று
முகை = அரும்பு
உ–ஒ. மொக்குள் = அரும்பு

முகு

முகம் = முன்னால் நீண்டிருக்கும் மூக்கு
முகடு = மூக்குப் போன்ற கூரை
முகட்டுப் பூச்சி – மூட்டைப் பூச்சி – மூட்டை
முகடி = முகட்டுத்தரத்தில் இருப்பதாகக் கருதப்படும் பேய், மூதேவி
முகடி = முகரி
முகடு = மலை முதுகு
முக்கு = தெரு மூலை, மூக்குப் போன்ற சந்து
முக்கை = ஆறு திரும்பும் மூலை
மூக்கு = முன்னால் நீண்டிருக்கும் உறுப்பு. மூக்குப் போல் நீண்டு கூரியது

முகு

முகர் = மூக்கால் மணத்தை அறி
முகர் – நுகர் = மணத்தையறி, இன்புறு
முக = மணத்தையறி, விரும்பு
முக – மோ = விரும்பு, காதல்கொள்
மோ+கம் = மோகம்
மோகம் – மோகி, மோகினி = காதலூட்டிக் கொள்ளும் பேய்

முகு

முகம் = முதல்
முகமை – முகாமை = தலைமை
முகம் – மகம்
மகமை = தலைமை, ஊர்த்தலைவனுக்குக் கொடுக்கும் வரி
மகன் = படைப்பில் பெரியவன், மாந்தன்
மக – மா = பெரிய
மக – மகி
மகமை – மகிமை = பெருமை

இவ்வாறு தமிழ்மொழியின் சொற்பிறப்பு வரலாறு குறித்து மொழிஞாயிறு பாவாணர் எழுதியுள்ள செய்திகளை நாமும் உணர்ந்து வருங்காலத் தலைமுறையினருக்கும் உணர்த்தி அவர்களின் உள்ளங்களில் தாய்மொழிப் பற்றை விதைப்போம்.

சொற்குவையின் தோற்றுவாய்
பேரா. வ.அய்.சுப்பிரமணியம்

முனைவர் மா. பூங்குன்றன்
பதிப்பாசிரியர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

இந்திய மொழிகளெல்லாம் சமற்கிருதத்திலிருந்து தோன்றியவை என்று ஒரு காலத்தில் நம்ப வைக்கப்பட்டது. மதம் பரப்ப வந்த பாதிரியார் கால்டுவெல் பெருமகனார், மொழி ஆய்விலும் ஈடுபட்டு, தென்னாட்டில் மொழிகள் பல இதிலிருந்து வேறுபட்டு ஒரு மொழிக்குடும்பமாக தனித்து இயங்குகின்றன என்று ஆய்ந்தறிந்தார். அம்மொழிக்குக் குடும்பத்திற்குத் திராவிட மொழிக் குடும்பம் என்று பெயருமிட்டார். அவருக்குப்பின், அந்தத் திராவிட மொழிகளுக்கான ஆய்வினை அறிஞர்கள் பலரும் முன்னெடுத்தனர். அவர்களுள் முகாமையான பேராசிரியர்கள் தேவநேயப்பாவாணர், இலக்குவனார், வ.அய். சுப்பிரமணியம் ஆகியோராவர்.

இவர்களுள் பேராசிரியராகவும், இற்றை மொழியியலில் ஆழங்காற் பட்டவரும், தனக்குக் கிடைத்த அதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு நிரம்பச் செயற்பட்டவரும், உலக அளவில் மதிக்கப்பட்ட மொழியியல் அறிஞருமான பேராசிரியர் வ.அய்.சுப்ரமணியம் அவர்களின் செயற்பாடு பெரிதும் பாராட்டக் கூடியது. அன்னவரின் நூற்றாண்டு நடந்து கொண்டிருக்கையில், அவரின்கீழ்ப் பணியாற்றிய மாணவன் என்ற வகையில், அவரைப் பற்றி நானறிந்த சிலவற்றைப் பகிர்வதில் பெருமை கொள்கிறேன்.

பேராசிரியர் தனிநாயக அடிகளாருடன் இணைந்து, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தைத் தொடங்கி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை உலகின் பல்வேறு இடங்களில் நடத்தினவர்தாம் பேரா. வ.அய்.சு. அவர்கள்.

அவ்வாறு இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதன் பயனாகத் தமிழ்நாடு அரசு "உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்" ஒன்றை நிறுவியது. அதற்காகப் பெரிதும் பாடுபட்டவர்கள் பேராசிரியர் தனிநாயக அடிகளாரும், பேராசிரியர் வ.அய்.சு. அவர்களும்தாம். அந் நிறுவனம் அரிய பல பணிகளை அன்றிலிருந்து இன்றுவரை ஆற்றி வருகிறது.

கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று இருந்தபோதே பேராசிரியர் வ.அய்.சு, தமிழ் மட்டுமல்லாமல் தமிழோடு இணைந்த அனைத்துத் திராவிட மொழிகள், அவற்றின் இனம், தொன்மை, பண்பாடு, மற்றும் நிலஞ்சார்ந்த அனைத்தையும் ஆராயும் வண்ணம் 1977–இல் "திராவிட மொழியியல் கழகம்" என்ற ஆராய்ச்சி நிறுவனத்தைத் திருவனந்தபுரத்தில் நிறுவினார். கேரள அரசு இவரின் ஆற்றலையும், ஆய்வையும் புரிந்துகொண்டு, அவரைப் பெரிதும் மதித்து 30 ஏக்கர் நிலத்தை அந்த நிறுவனத்திற்கு ஒதுக்கித் தந்தது.

1981–இல் மா.கோ.இராமசந்திரன் (எம்.ஜி.ஆர்.) முதல்வராக இருந்த காலத்தில் அவர் தமிழுக்கென ஒரு பல்கலைக் கழகம் நிறுவினார். தஞ்சையில் நிறுவப்பட்ட அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு யாரும்

எதிர்பாராத வகையில், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியக் கொண்டிருந்த பேரா. வ.அய்.சுப்பிரமணியம் அவர்களைத் தேர்ந்தெடுத்துப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக அமர்த்தினார்.

அன்றைய முதல்வர் மா.கோ. இராமசந்திரன் அவர்கள், இவரின் விரிந்த செயல் திட்டங்கள் எதற்கும் தடையில்லாமல், துணையாக இருந்தார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றவுடன் தன் அதிகாரத்தைச் சரியாகவும் முழுமையாகவும் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் புலம், கணினித் துறை, அகராதித் துறை, சித்த மருத்துவத் துறை, தொல்லியல் துறை, சுவடியியல் துறை என 24 அறிவியல் மற்றும் வரலாற்றியல் சார்ந்த துறைகளை நிறுவினார். பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும் பல நடுவங்களை நிறுவிச் செயற்படுத்தினார்.

களஞ்சிய மையம்

தமிழில் கலைக்களஞ்சியம் (Encyolopedia) 1968–இல் வெளிவந்து பல ஆண்டு ஆனபின், தமிழ்ப் பல்கலைக்கழக வாயிலாக அறிவியல் களஞ்சியம், வாழ்வியல் களஞ்சியம் என இருப்பிரிவாகப் பிரித்து 33 தொகுதிகளாக வெளிவருவதற்கு ஒரு மையத்தைச் சென்னையில் 1983–இல் நிறுவினார். அதில் அறிவியலில் மருத்துவம், பொறியியல் இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் எனப் பத்துத் துறைகளும், வாழ்வியலில் பல துறைகளும் உருவாக்கப் பெற்றன. அதில் இயற்பியல் பிரிவில் என்னைப் பதிப்பாசிரியராக அமர்த்தியிருந்தார்.

தத்துவ மையம்

தமிழரின் அறக்கோட்பாடுகளை ஆய்வு செய்யும் வண்ணம் தத்துவ மையம் ஒன்றைக் காஞ்சிபுரத்தில் நிறுவினார்.

பழங்குடியினர் ஆய்வு மையம்

தமிழினத்தின் பழங்குடிகளைப் பற்றி ஆய்வுசெய்யும் வண்ணம் உதகமண்டலத்தில் பழங்குடியினர் ஆய்வு மையம் நிறுவினார்.

ஆழ்கடல் ஆய்வு மையம்

கடல்கொண்ட தமிழ்நாட்டின் பகுதிகளை ஆய்வுசெய்யும் வண்ணம் மண்டபத்தில் ஒரு மையம் நிறுவி, அன்றைய அளவில் ஆழ்கடல் ஆய்வுக் கப்பல் ஒன்றைச் செர்மனியிலிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

அவரின் விரிவான செயற்பாட்டிற்கு அன்றைய தமிழ்நாடு அரசும், பல்கலைக்கழக நல்கைக் குழு (UGC)வும் துணையாயிருந்தன. அன்றைய பல்கலைக் கழக நல்கைக் குழுத்தலைவர் திரு. யஷ்பால் அவர்மீது நல்ல மதிப்பு வைத்திருந்தார்.

தமிழில் கல்வி

பொறியியல் படிப்பையும், மருத்துவப் படிப்பையும் தமிழிலேயே கொண்டு வருவதற்கான அனைத்து நூல்களையும் உருவாக்கிப் படிப்பைத் தொடங்குவதற்கான இசைவுக்காகக் காத்திருந்தார்.

தமிழ்க் கலைச்சொற்கள்

அனைத்துத் துறைகளிலும் தமிழ்க்கலைச் சொற்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று பல துறைகளுக்கும் கலைச்சொற்குழு உருவாக்கினார். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்துறை அறிஞர்களையும் ஒன்றிணைத்தார். மருத்துவத்துறையில் நரம்பியல் துறை மருத்துவர் நரேந்திரன் அவர்கள் இவருக்குப் பெரிதும் துணையிருந்தார்.

கணினித் துறை

கணினியே அப்பொழுதுதான் இங்கு அறிமுகமாகிக் கொண்டிருந்த நிலையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கணினித் துறை ஒன்றை நிறுவினார். அனைத்துத் துறைக் கலைச்சொற்களையும் கணினியில் தொகுத்து வகைப்படுத்தலும்,

அகரவரிசைப்படுத்தலுமான பணிகளை அதில் செய்வித்தார். பொறிமொழிபெயர்ப்பில் அன்றைக்குப் புதிய ஆய்வு நடந்து கொண்டிருந்த நிலையில், உருசிய மொழியிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கி, பல உருசிய அறிவியல் நூல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்வித்தார்.

முதல் பணிக்காலம் நிறைவு

அத்தனை பணிகளும் முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தபோது, அவரின் துணைவேந்தர் பணிக்காலமான மூன்றாண்டு நிறைவுற்றது. அடுத்த பணிக்காலத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்படுவரா என்கிற ஐயம் நிறைந்திருந்தது. அவரால் அமர்த்தப்பட்ட துணைவேந்தர் பொறுப்புக் குழுவே அவரின் பணிகளை அந்தக் குறுகிய காலத்தில் முடக்கியது. எதிர்பாராத வகையில் அவர் மீண்டும் துணைவேந்தரானார். மீண்டும் துணைவேந்தர் பொறுப்பேற்றபின் முழு வீச்சில் மறுபடியும் இயங்கினார்; இயக்குவித்தார்.

அருங்கலைச் சொல் அகரமுதலி

தூய தமிழில் அவருக்குப் பெரிதும் நாட்டமில்லை. எனினும் "தூய தமிழ் அகரமுதலிகள் துறை" என்ற ஒரு துறையை உருவாக்கினார். அப்போது வழக்குரைஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. அருளியாரை அதில் முதன்மைப் பதிப்பாசிரியராக அமர்த்தி, 300க்கும் மேற்பட்ட துறைகளின் கலைச் சொற்களை நல்ல தமிழில் உருவாக்கும் பணியை ஒப்படைத்தார். அத்துறை 17 ஆண்டுகள் செயற்பட்டு. 1,27,000 சொற்கள் கொண்ட "அருங்கலைச் சொல் அகரமுதலி" என்ற பெருந்தொகுதியை 2002-இல் வெளியிட்டது.

சொல் தரவகம்

ஒரு மொழியின் வளர்ச்சிக்கும், அதன் வளத்தைத் தக்க வைக்கவும் அம்மொழியின் தொடக்கத்தில் தோன்றிய சொற்கள்முதல் இன்றளவும் உருவாகிக் கொண்டிருக்கும் சொற்கள்வரை அனைத்தையும் சேமித்து, "சொல் தரவகம்" (Word Corpus) ஒன்றை உருவாக்க வேண்டும். அதை அனைவரும் பயன்படுத்தும் வகையில் ஓர் அமைப்பாக உருவாக்க வேண்டும். "Word Corpus" என்ற பெயரில் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அவரவர் மொழிகளில் அதை உருவாக்கித் தக்க வைத்துக் கொள்கின்றனர். அவ்வாறு தமிழிலும் "சொல் தரவகம்" உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தை எடுத்துக் கொண்டு, அதை எப்படியாவது தமிழ்மொழிக்கு உருவாக்கிச் செயற்படுத்திவிட வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசுக்கும், பல்கலைக்கழக நல்கைக் குழுவிற்குமாக அலைந்தார். அப்போது சிலமுறை என்னையும் அவர் அழைத்துச் சென்றிருந்தார். அந்நாளில் அத்திட்டத்தின் தேவையை யாரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அன்றைய நாளில் இணையதளம் என்ற ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. 1986-இல் "Word Corpus" என்று அவரால் உச்சரிக்கப்பட்ட அச்சொல் என் காதில் பல காலம் ஒலித்து கொண்டிருந்தது.

இதுபோல் சில திட்டங்கள் அவரால், அந்த அதிகாரத்திலிருந்தும் செயற்படுத்த முடியாமலேயே அவர் பணிக்காலம் முடிவுற்றது. ஆனால், அதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை.

அவருக்கான பிரிவுக்கூட்டம் ஒன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அவரின் பணிகளுக்குத் துணையாயிருந்த அனைவருக்கும் அவர் நன்றி கூறிப் பேசினார்.

1981-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்காக 973 ஏக்கர் வெற்று நிலமாக மட்டுமே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் கட்டடங்கள் கட்டத் திட்டமிடுவது முதல் அகக் கட்டமைப்பிலிருந்து அவர் பணி தொடங்கியது. ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை நட்டார். நாள்தோறும் விடியற்காலைக் குளிரில் தலையில் துண்டு கட்டிக்கொண்டு, கட்டட வளர்ச்சியோடு, ஒவ்வொரு மரக்கன்றின்

வளர்ச்சியையும் பார்வையிட்டு, வளாகத்தைச் சுற்றி வருவது அவரின் நாள்தோறுமான பணியாக இருந்தது. அவரின் குழந்தைகளைப் போலவே மரக்கன்றுகளை அவர் கவனித்து வந்தார்.

அதைக் குறித்து அந்தப் பிரிவுக் கூட்டத்தில் அவரின் பேச்சினிடையில், "நான் ஊன்றிய மரக்கன்றுகள் வளர்ந்துள்ளன. நான் மறைந்த பிறகு, என்னை எரித்த சாம்பலை இந்த மரக்கன்றுகளின் காலடியில் தூவ வேண்டும். அதற்கு இசைவு தரும்படி என் ஒரேயொரு கோரிக்கையை அப்போது இருக்கும் இந்தப் பல்கலைக்கழக நிருவாகத்திடம் முன்வைக்கிறேன்" என்று பேசினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

அவரின் பணி அங்கு முடிந்தாலும் வெளியில் வந்தும் அதே வீச்சில் தொடர்ந்தது. அனைத்துத் திராவிட மொழிகளுக்குமான பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று அதற்கான முன்னெடுப்பு முயற்சியில் ஈடுபட்டார். அவரின் வேண்டுகோளுக்கு ஆந்திர அரசு செவி சாய்த்தது. தமிழ்நாடு, ஆந்திரா, கருநாடக மாநிலங்களின் எல்லைகள் கூடுமிடமான குப்பம் நகரில் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு ஆந்திர அரசு இடம் ஒதுக்கியது.

அது தொடங்குவதற்கான அனைத்துப் பணிகளையும் மூன்று மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தொடங்கினார். அது இன்று சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

திராவிடக் களஞ்சியம் (Dravidian Encyclopedia)

திருவனந்தபுரத்தில், தான் நிறுவிய திராவிட மொழியியல் கழகத்தின்வழி அனைத்துத் திராவிட மொழிகளின் தரவுகள், திராவிட இனங்களின் பண்பாடு, நாகரிகத் தரவுகள், நிலப்பரப்புகளின் தரவுகள் என அனைத்துத் தரவுகளையும் குறித்த மூன்று பெருந் தொகுதிகளை உருவாக்கத் திட்டமிட்டார்.

இரண்டு தொகுதிகள் வெளிவந்து விட்ட நிலையில். மூன்றாம் தொகுதி மிகப் பெருந்தொகுதி. அதற்காகப் பெருந்தொகை தேவைப்பட்டது. அன்றைக்கு பாரத ஜனதாக் கட்சிதான் நடுவணரசில் ஆட்சியிலிருந்தது. அன்றைய ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. முரளி மனோகர் ஜோஷியிடம் நிதி கேட்டுக் கோரிக்கை விடுத்தார்.

நேரிலே அவரைச் சந்தித்தபோது திரு. முரளி மனோகர் ஜோஷி, நம் பேராசிரியர் வ.அய்.சு. விடம், "பேராசிரியர் நீங்கள் கேட்ட தொகயை இரு மடங்காகக் கொடுக்க நாங்கள் அணியாமாக உள்ளோம். நீங்கள் வெளியிடும் "திராவிடக் கலைக் களஞ்சியம்" என்ற தொகுதிகளில் 'திராவிடம்' என்ற சொல்லை நீக்கிவிட்டு, "பாரதக் கலைக் களஞ்சியம்" என்று பெயர் மாற்றிக் கொண்டு வாருங்களேன்" என்று கூறினார்.

உடனே, நம் பேராசிரியர் அதற்கு மறுமொழியாக, "நல்லது ஐயா, நீங்களும் நம் தேசிய கீதப் பாடலிலிருந்து "திராவிட உக்கல வங்கா" என்ற வரியில் உள்ள "திராவிட" என்ற சொல்லை நீக்கி விடுங்கள். நான் இதையும் நீக்கி விடுகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து வந்துள்ளார். ஆனால் வேறு ஏற்பாட்டின்படி அது சிறப்பாகவே வெளிவந்தது.

திருக்குறள் விரைவு வண்டி கோரிக்கை

திருநெல்வேலி வரை மட்டுமே இருந்த இருப்புப்பாதை, அவர் காலத்தின்தான் கன்னியாகுமரி வரை புதிய பாதை நீட்டித்து அமைக்கப்பட்டு, தொடர்வண்டிகள் கன்னியாகுமரியிலிருந்து இயக்ககப்பட்டன.

முதலில் கன்னியாகுமரியிலிருந்து தில்லி வரையிலான ஒரு புதிய விரைவு வண்டி அறிமுகப்படுத்தப்பட்டது. ஏற்கெனவே 'தமிழ்நாடு விரைவு வண்டி' என்ற பெயரில் ஒரு தொடர்வண்டி இருப்பதால், அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று அலசப்பட்டது. அப்போது வ.அய்.சு ஐயா,

அதற்குத் "திருக்குறள் விரைவு வண்டி" (Tirukkural Express) என்று பெயர் வைக்கலாம் என்று கருத்து அறிவித்தார். அது மிகவும் பாராட்டப்பட்டது. அதையே அன்றைய தமிழக அமைச்சர் தமிழ்க்குடிமகன் நடுவணரசுக்குப் பரிந்துரைத்தார். அவரைப் பாராட்டும் வகையில், அதன் தொடக்க விழாவிற்கு நீங்கள் வர வேண்டும் எனவும் கூறியிருந்தார். ஆனால், முறையான அழைப்பு எதுவும் வரவில்லை. இவரும் அதை எதிர்பார்க்கவில்லை.

அந்தக் குறிப்பிட்ட தொடர்வண்டி அப்பாதையில், "திருக்குறள் விரைவு வண்டி" என்ற பெயரில் வெள்ளோட்டம் விடுவதற்கான நாளும் குறித்து அறிவிக்கப்பட்டது. ஆர்வ மிகுதியால் பேராசிரியர் வ.அய்.சு அவர்களும் அங்கு வந்து ஓரமாகக் கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்தார். "திருக்குறள் விரைவு வண்டி" புறப்பட அணியமாக உள்ளது என்று அறிவிக்கப்பட்டது. அதை மகிழ்ச்சியோடு கேட்டுவிட்டு, விடுவிடென்று விரைவாக வெளியேறினார். செயல் நடந்தால் போதும் என்றும், எந்தப் பாராட்டும் தமக்குத் தேவையில்லை என்ற மனப்பான்மை அவருக்கு எப்போதும் உண்டு.

சொற்குவை என்ற பெயரில் அவர் கூறிய சொல் தரவகம்

நாம் முன்பு கூறியதுபோல் 1986–இல் அவர், 'சொல் தரவகம்' (Word Corpus) தமிழ்மொழிக்குத் தேவை என்று அதற்காகப் பாடுபட்டு, அது நிறைவேறாத நிலையில் அவரின் பணிக்காலமும் முடிந்து, அவரும் 2009இல் காலமாகி விட்டார்.

அவர் கூறிய "Word Corpus" என்ற ஒலி மட்டும் நம் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககத்தில் அகரமுதலிப்பணி நிறைவேறிய ஒரு நிலையில், அடுத்து என்ன பணித்திட்டம் என்று அரசு கேள்வி எழுப்பியபோது, நாம் 'சொல் தரவகம்' (Word Corpurs) என்ற திட்டத்தை இணையதளத்தில் ஏற்றக்கூடிய திட்டமாக 'சொற்குவை' என்ற பெயரில் வடிவமைத்துக் கோரிக்கை எழுப்பினோம்.

இந்தத் திட்டம் அரசு அளவில் மிகவும் வரவேற்புக்குள்ளானது. 2019–இல் செயலுக்கும் வந்தது. 3 ½ இலக்கம் சொற்களோடு தொடங்கிய அந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளில் 15 ½ இலக்கம் சொற்களாக இன்று பெருகியுள்ளது.

அனைத்துத்துறைக் கலைச்சொற்களும் திரட்டப்பட்டு, உலகம் முழுவதும் எங்கெங்குத் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் பயனாகும்படி, இணைய தளத்திலும் கைபேசி வழியிலும் பயன்படுத்தும்படி பரவலாக்கப்பட்டுள்ளன. அன்றாடம் ஒவ்வொரு துறையிலும் உருவாகும் சொற்களும் உடனுக்குடன் தமிழில் கலைச்சொற்களாக உருவாக்கப்பட்டு, சொற்குவையில் பதிவேற்றப்படுகின்றன. பேராசிரியர் அறிஞர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் எண்ணிய எண்ணம் 44 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நனவாகியுள்ளது.

தமிழறிஞராகவும், மொழியியல் அறிஞராகவும், துணைவேந்தராகவும் பல கல்வி நிறுவனங்கள் நிறுவிய நிறுவனராகவும் இருந்து தமிழுக்கும், திராவிடத்திற்கும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. ஓர் அரசு செய்யக்கூடிய பணியை ஒரு தனி மாந்தராக இருந்து தன் வாழ்க்கையையே ஒப்புவித்துக் கொண்டு ஒரு பெரும் பணியைச் செய்துள்ளார். அவர் மறைந்தாலும் அவர் விட்டுச்சென்ற பணியை அவர் உருவாக்கிச் சென்ற நிறுவனங்கள் செய்துகொண்டுள்ளன.

அப்பெருமகனாரைப் போற்றும் வண்ணம் தமிழ்நாட்டில் புகழ்பெற்ற இடத்தில் அவர் பெயரில் நினைவு மண்டபமும், சிலையும் வைக்க வேண்டும் என்று அறிஞர் உலகம் சார்பாகக் கோரிக்கையை நாம் அரசுக்கு முன்வைக்கிறோம்.

தமிழிய (திராவிட) மொழிக்குடும்ப ஒப்பிலக்கணம்

முனைவர் இரா.கு.ஆல்துரை
தமிழ்நாட்டரசின் வீரமாமுனிவர் விருதாளர்

மொழிக்குடும்பம்

"பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய அறிஞர்களால் சமற்கிருத மொழி கண்டுபிடிக்கப்பட்டது, இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் ஒப்பீட்டு மொழியியல் (comparative philology) பற்றிய ஆய்வையும், இறுதியில் இக்கால மொழியியல் (modern linguistics) முழு அறிவியலையும் வளர்ப்பதற்கான தொடக்கப் புள்ளியாக அமைந்தது" (Burrow 2001: pre. v).

முந்தைய மூலமொழி ஒன்றிலிருந்து தோன்றிய பொதுத் தன்மைகளைக் கொண்ட மொழிகளின் தொகுதி ஒரு மொழிக்குடும்பமாகும். ஒன்றாக இருந்த இந்த முந்தைய மொழியை முந்துமொழி (proto language) என அழைக்கின்றனர். வரலாற்று மொழியியலில் மொழிக்குடும்பம் என்பது மரக்கிளை அமைப்பைக் கொண்டது. அதாவது ஒரு மரத்தின் கிளைகள் கீழும்மேலுமாகவும் சிறியதும் பெரியதுமாக இருக்கும். என்றாலும் இவை அனைத்தும் ஒரு மரத்து உறுப்புகள்தாம். அவ்வாறே ஒரு முந்து மொழி யிலிருந்து தோன்றிய மொழிகள் அனைத்தும் ஒரு குடும்பத் தன்மைகளுடன் விளங்கும். உலகத்தில் ஏழாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் உள்ளன என்றும் இவை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிக்குடும்பங்களாக இருக்கின்றன வென்றும் குறிப்பிடுகின்றனர்.

கால்டுவெல்

ஒப்பியன் மொழியியல் அடிப்படையில்தான் மொழிகளைக் குடும்பங்களாக வகைப் படுத்துகின்றனர். மொழிகளை இனவடிப்படையில் குடும்பங்கங்களாகப் பிரித்து விளக்கியது பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொழியியல் ஆய்வில் நிகழ்ந்த ஒரு மாபெரும் கண்டுபிடிப்பாகும். இதனால் அதுவரை மொழிகள்பற்றி கொண்டிருந்த பல தவறான கருத்துகள் அடிபட்டுப்போயின. முன்னர் சமற்கிருதம் இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் எனக் கூறி வந்த தவறான செய்தி, குடும்பமொழிகள் என வகைப்படுத்தப் பட்டபின் பொய்யாகிப்போனது. இதேபோல இலத்தீனம் எல்லா மொழிகளுக்கும் மூலம் என்னும் அடிப்படை யற்ற கருத்து மேலையுலகில் நிலவி வந்துள்ளது. மொழி அறிவியல் இனவடிப்படையில் தமிழிய மொழிக்குடும்பம் சமற்கிருதம் சார்ந்த மொழிக்குடும்பத்திலிருந்து வேறானது என்னும் உண்மைக் கருத்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிப்படையாயிற்று. இந்த உண்மைக் கருத்து சிலருக்குப் பெரும் நெருடலாக அமைந்தது. தமிழிய மொழிக்குடும்பத்தை நிறுவிய கால்டுவெல் பெருமகனார் பிரித்தாளும் சூழ்ச்சியால் அவ்வாறு சொல்லி விட்டார் என்று குறை காண்போர் இன்றளவும் இருக்கின்றனர். உண்மையில் கால்டுவெல் அன்றைய காலக்கட்டத்தில் நிலவி வந்த மொழியியல் கண்டு பிடிப்புகளைத் தமிழிய மொழிக் குடும்பத்திற்குப் பொருத்திப் பார்த்துள்ளார். இதில் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளவை ஓர் ஆய்வாளன் ஆய்ந்து குறிப்பிட்டுள்ளவை அல்லாமல் வேறொன்றும் இல்லை என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடலாம். இதில் கவனிக்க வேண்டியது என்ன வென்றால் கால்டுவெல் காலத்தில் தமிழ் பற்றிய எதிர்மறை கருத்துகள் மிக அழுத்த மாகவும் பரவலாகவும் இருந்தன. அவற்றுள் பலவற்றைத் தம் ஆய்வின் மூலம் உண்மையில்லை எனக் காட்டினார் கால்டுவெல்; சிலவற்றில் அவராலும் உண்மைநிலையைக் காட்ட இயலவில்லை. சான்றாகத் திராவிடம் என்ற சொல் தமிழ் என்பதிலிருந்து பிறந்ததாக இருக்க, திராவிடம் என்பதிலிருந்து தமிழ் என்னும் சொல் பிறந்திருக்க வேண்டும் என்று முறைமாற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதேபோல பழந்தமிழ் நாட்டுக்கே உரித்தான சேரன், சோழன், பாண்டின் என்னும் மூவேந்தர் பெயர்கள் தமிழ்ப்பெயர்கள் அன்று என்று குறிப்பிட்டுள்ளார். இன்று அவரைக் குறைகாண்போர் கூற்றுப்படி, அவர் ஒரு சார்பாகக் குறிப்பவர் ஆயிருந்தால் தமிழுக்கு எதிரான இருக்கும் இவைபோன்ற கருத்துகளைப் புலப்படுத்தியிருப்பாரா? அன்றைய நிலையில் அவருக்குக் கிடைத்த தரவல்களைக் கொண்டே அவர்தம் ஆய்வுப்பணியை மேற்கொண்டுள்ளார்.

"திராவிடம் வடமொழிச் சார்பற்றதென்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கிய தென்றும், வடசொல்லென மயங்கும் பல சொற்கள்

தென்சொற்களே என்றும், முதன்முதல் எடுத்துக்காட்டி, மொழிநூல் சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல் கண்காணியரே. திராவிடமொழிகள் மொத்தம் பன்னிரண்டென்பதும், அவற்றுள் ஆறு திருந்தியனவும், ஆறு திருந்தாதனவுமாகும் என்பது, பெலுச்சித்தானத் திலுள்ள பிராகுவி திராவிட மொழியென்பதும், இவருடைய கண்டுபிடிப்புகளே" (பாவாணர் 2001,1:83). என்பனபோன்று கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தைப் அறிஞர் பலரும் போற்றி வருகின்றனர். திராவிட மொழியியலாளர்கள் கால்டுவெல் அவர்களைத் திராவிடமொழியியலின் தந்தை எனக் குறிப்பிடுகின்றனர்.

கால்டுவெல்தம் மொழியாய்வுக் காலத்தில் சமற்கிருதத்தினைப் பற்றிய விளக்கம் இல்லாமல் தமிழியக் குடும்பத்தைப்பற்றித் தெளிவான விளக்கம் அளிக்க முடியாது என்னும் ஒரு நிலை இருந்தது. அடிப்படையில் அவர் ஆராய எண்ணியது தமிழிய மொழிகளையே. என்றாலும் தமிழியக் குடும்ப மொழிகளின்மேல் சமற்கிருதத்தின் தாக்கம் எனக் கூறப்படுபவற்றுள் பல ஆராயப்படாமல் குறிப்பிட்டவையாக இருப்பதைக் கண்டுணர்ந்தார். அதற்கு அவர்தம் சமற்கிருத அறிவு பெருந்துணை புரிந்தது. எவ்வாறாயிலும் சமற்கிருதம் உள்ளிட்ட இந்தோ–ஐரோப்பிய மொழிகள், சித்திய மொழிகள் போன்று பன்மொழி அறிவு கால்டுவெல் அவர்களுக்கு இருந்ததனாலேயே அவர்தம் ஆய்வு முடிபுகள் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

"சமற்கிருத ஆய்வு அண்மைக் காலத்தில் மற்றொரு திசையிலும் முன்னேறி யுள்ளது. இந்தியாவின் ஆரியர் காலத்திற்கு முந்தைய மொழிகள் சமற்கிருதத்தின் மீதும், அடுத்தடுத்த நிலைகளில் இந்தோ–ஆரிய மொழிகள் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றிய ஆய்வு, கணிசமான அளவும் உறுதியானதுமான முடிவுகளைக் காட்டுகின்றன" (Burrow 2001:pre. vi) .

மொழியினம்

"கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் ஏதோ ஒரு காலக்கட்டத்தில் இந்தோ–ஐரோப்பியக் குடும்பத்தினர் இரான், ஆசிய மினார், வடமேற்கு இந்தியா ஆகிய பகுதிகளின் பெரும்பான்மையான இடங்களுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் புலப்பெயர்ச்சிக்கான காரணம், அவர்தம் மூலம் முதலியன இன்னும் அறுதியிடப்பெற வில்லை. ஆனால் மொழியியல் அடிப்படையில் நாம் ஆரியர் என்ற ஓர் இனம் இருந்ததாகவும் அவர்களது மொழி இந்தியா, இரான் ஆகிய இடங்களின் பேச்சு மொழிகளுக்கு முந்தைய நிலையினதாக இருந்ததாகவும் கொள்ளலாம். இவற்றுள் இந்தியாவின் பேச்சு மொழிகளுள் பழைமை யானதற்குச் சான்றாக அமைவது இருக்கு மறையாகும். இறைப்புகழ்ச்சிப் பாடல் தொகுப்பாக விளங்கும் இது சமயப் பூசாரியார் மொழியாகவும் மரபுத்தன்மையதாகவும் இருக்கிறது" (Berriedale Keith 1973:3).

"இருக்கு மறை மொழியிலிருந்து செவ்வியல் சமற்கிருதம் வளர்ந்து வந்துள்ள நிலையைப் பின்னர் வந்த சம்மிதைகள், பிரமாணங்கள் ஆகியவற்றின் வழி படிப்படியாகக் காட்டலாம். எவ்வாறாயினும் இவ்வளர்ச்சி ஒரு தனிப்பட்ட வகையின தாகும். இது பொதுப்பேச்சு மொழியிலிருந்து மரபால் தடைபடாமலும் இலக்கண ஆய்வால் முறைப்படுத்தப்படாமலும். இயல்பாய் வளர்ந்து வந்ததன்று. இவ்வினத்தின் மொழி அவர்களது பூசாரிகளால் இருக்கு மறையின் இறைவன் புகழ்ப் பாடல்கள் மூலம் வளர்ந்து வந்துள்ளது. ஐயத்திற்கு இடமில்லாமல் மொழி மாற்றத்தில் இயல்பான காரணத்திற்கு உள்ளாகியுள்ளது. ஆரியமல்லாத் தன்மை பலவற்றை அவர்கள் முன்னரே அங்கிருந்த முண்டா அல்லது திராவிட இனத்தாரிட மிருந்து படிப்படியாகச் சேர்த்துக் கொண்டுள்ளனர்" (Berriedale Keith 1973:4). சமற்கிருதம் இந்தோ–ஐரோப்பிய குடும்பத்தைச் சார்ந்தது என்று நிறுவப்பட்ட நிலையில் அதனின்று வேறாயது தமிழியம் என்னும் மொழிக்குடும்பம் என்பது வெளிப்படையாயிற்று.

இலக்கணம்

ஒரு மொழி சொற்களஞ்சியம், இலக்கணம் ஆகிய இரண்டுடன் செயல்பட்டு வருகிறது. குடும்பமொழிப் பகுப்பிற்குச் சொல், இலக்கணம் ஆகிய இரண்டனுள் சொல்லைக் காட்டிலும் இலக்கணமே முதன்மை இடம் பெறுகிறது. இன்றைய நிலையில், உலக அளவில் எம்மொழியும் பிறமொழிச்சொல் கலப்பு இல்லாத தூய மொழியாக இல்லை. சொற்களுள் பெரும்பாலும் பெயர்ச்சொற்கள்தாம் கடன் கொள்ளப்படுகின்றன. ஒரு மொழி எவ்வளவுச் சொற்களைக் கடன் வாங்கினாலும் அச்சொற்கள் ஒட்டுப் பொருள்களாகவே அம்மொழியில் இருக்கும். தேவை ஏற்படும் பொழுது அவற்றை நீக்கி வழக்குப்பெறும் தகுதியை அம்மொழி கொண்டிருக்கும். இதற்கு முதன்மையான சான்றாக மணிப்பிரவாள நடையைக் குறிப்பிடலாம். தமிழில் அளவுகடந்து சமற்கிருதச்சொற்கள் கலந்ததால் ஏற்பட்ட பெயர்தான் மணிப்பிரவாளம். இன்றைய நிலையில் தமிழ் அச்சொற்கலப்பில் பெரும்பகுதியை விலக்கியுள்ளது.

"மொழிகள் அயற்சொற்களால் கலப்புச் சொற்களஞ்சியங்களைக் கொண்டி ருந்தாலும் தங்களது இலக்கணத்தில் கலப்புத்தன்மையைக் கொண்டிருக்கா. எரவாசு (Hervas) அவர்களுக்கு விடையூழியர்கள் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரௌகான் (Araucan) மக்கள் தங்கள் சொந்த மொழியின் இலக்கணத்தையும் சொற்றொடர் அமைப்பையும் கொண்டிருந்தாலும் சுபானிசு அல்லாத ஒரு சொல்லையும் பயன்படுத்துவதில்லை என்று கூறியுள்ளனர். இக்காரணம் பற்றியே அனைத்து மொழிகளிலும் மொழிகளுக் கிடையேயான தொடர்புக்கும் பாகுபாட்டிற்கும் இலக்கணம் அடிப்படையாக்கப் பட்டுள்ளது. ஆகையால் மொழிப்பாகுபாட்டிலும் மொழி அறிவியலிலும் கலப்புமொழி மரபுத்திறம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள இயலாததாக உள்ளது. இலத்தீனம் அல்லது உரோமன்சு சொற்களை முழுமையாகப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் முழு சொற்றொடர்களை உருவாக்கலாம். அப்பொழுது ஆங்கிலத்தில் எஞ்சி இருக்கும் இலக்கணம் தியுத்தானியப் பணித்திறமாக இருக்கும்" (Max Muller 1965:65).

சமற்கிருதம்

"சமற்கிருதம் வடநாட்டிலோ தென்னாட்டிலோ ஒரு காலத்தில் பேச்சு மொழியாக இருந்தது என்பது நம்பத் தகுந்தது அன்று. தென்னாட்டுப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் வாழும் பார்ப்பனர்கள் சமற்கிருத மொழியைப் படித்து வருகின்றனர்" (Caldwell 1987:6) என்று சமற்கிருதத்தின் நிலையைக் கால்டுவெல் நன்கு புரிந்துகொண்டிருந்தார். இருந்தாலும் சமற்கிருதம் இன்றளவும் இந்திய மொழிகளிடையே வாழ்ந்து கொண்டுத்தான் இருக்கிறது என்று குறிப்பிடுவாரும் உண்டு. இவர்கள் குறிப்பிடுவது சொற்கடன்களைப் பற்றியதாகும். சமற்கிருதச் சொற்கள், குறிப்பாக இந்திய மொழி இலக்கியங்களில் பெருமளவில் இடம்பெற்றுள்ள தன்மையை வைத்தே இவ்வாறு குறிப்பிடுகின்றனர். ஆனால், இவ்வாறு குறிப்பிடுவோர் ஒரு மொழியில் சொற்களஞ்சி யங்களைக் காட்டிலும் இலக்கண அமைப்பே அடிப்படையானது என்பதை உணராததனாலேயே அவ்வாறு குறிப்பிடுகின்றனர். கால்டுவெல் சொன்னிலையிலும் பல இடங்களில் தமிழிய மொழிகளின் வளங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதே நேரத்தில் தமிழிய மொழிகள் சமற்கிருதத்திலிருந்து வேறுபட்ட இலக்கணத் தன்மைகளைக் கொண்டுள்ளன என்பதையே அவர் தம் ஒப்பிலக்கணத்தில் பெருமளவில் விளக்கியுள்ளார்.

சொற்கடன்

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திரவிடமொழிகள் சமற்கிருதத் திலிருந்து பெருமளவில் கடன்பெற்றுள்ளன. "இப்பொழுது தெலுங்குமொழியால் அம்மொழியிலுள்ள சமற்கிருதக் கடனை விட்டுவிடுவதற்குக் கடினம் என்பது உண்மை; சமற்கிருதக் கடனை நீக்குதல் கன்னடத்தில் மிகவும் கடினம்; மலையாளத்திலோ மிகமிகக் கடினம்" (Caldwell 1987:45). பெரும்பான்மை இம்மொழிகளில் காணப்படும் சமற்கிருதக் கடன் சொல்லளவினதாக இருக்கிறது. இலக்கண அமைப்பில் இம்மொழிகள் தமிழியக்குடும்ப மொழிக்குரியனவற்றைக் கொண்டுள்ளன. இதனாலேயே இம்மொழிகளின் குடிவழி தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இலக்கண வேறுபாடு

இலக்கண அமைப்பில் தமிழிய மொழிகளுக்கும் சமற்கிருதத்திற்கும் இடையே காணப்படும் இன்றியமையாத வேறுபாடுகள் பதிமூன்றினைக் காட்டியுள்ளார் கால்டுவெல் (1987:48–49).

"1.) தமிழிய மொழிகளில் உயிரில்லாப் பொருள்கள் உள்ளுணர்வில்லா உயிரிகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் பெயர்கள் அனைத்தும் பால்வேறுபாடு காட்டாத பெயர்களாக உள்ளன. படர்க்கைப் பகரப்பெயர்களில் மட்டும் ஆண் பெண் வேறுபாடு உண்டு. உயர்திணையைக் குறிப்பிடும் பெயரடைகள் (சரியாகக் குறிப்புப்பெயர்கள் என்று குறிப்பிட வேண்டும்) பகரப்பெயர் ஈறுகளைச் சேர்ப்பதனால் அமைகின்றன. படர்க்கை வினைமுற்று இதே பகரப்பெயர் ஈறுகளைச் சேர்ப்பதால் அமைகிறது. படர்க்கையிடப் பகரப்பெயருக்கு ஏற்றாற்போல் இதில் பால்வேறுபாடுகளைக் காட்ட ஒருமையில் மூன்று வடிவங்களையும் பன்மையில் இரண்டு வடிவங்களையும் கொண்டிருக்கின்றன. பிற இடங்கள் அனைத்திலும் பால்வேறுபட்டினைக் காட்ட ஆண் அல்லது பெண் என்னும் பொருள்தரும் சொற்களை முன்னிணைக்க வேண்டும். இவ்வாறான இடங்களில் விலங்கின் ஆண் அல்லது பெண்ணைக் குறிப்பிடுவதாக இருந்தாலும் அது அஃறிணையைச் சாராததாகக் கொள்ள இயலாது. அஃறிணையைக் காட்டும் பகரப்பெயர்கள் அவற்றுடன் இணைவது தேவை. இந்த நெறி, கூறொளியும் உருவலிப்பும் கொண்ட சமற்கிருதம், பிற இந்தோ–ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றி லிருந்து குறிப்பிடத்தக்க வேறுபாட்டினைக் கொண்டதாக உள்ளது. ஆனால், இது சித்தியக் குழு

மொழிகளில் உள்ள வழக்கைப் போன்றுள்ளது.

2.) தமிழியப் பெயர்கள் வேற்றுமை உருபுகள் இணைவதால் சொல்லுருமாற்றம் அடைவது இல்லை. பின்னொட்டுகள், தனியாகப் பிரிக்கக்கூடிய உருபுகள் ஆகியன சேர்வதனாலேயே சொல்லுருமாற்றம் அடைகின்றன. ஒருமை, பன்மை ஆகியன வேற்றுமைப்பாட்டில் காணப்படும் ஒரே வேறுபாடு உருபு சேர்க்கையில் ஒருமையில் அடிச்சொல்லோடு நேரே சேர்ந்துவிடும். பன்மையில் பன்மை ஈறுக்குப் பின் சேரும். இது முழுவதுமாகச் சித்திய மொழிகளைப் போன்று உள்ளது. எண், பால் எதுவாக இருந்தாலும் அனைத்துப் பெயர்களும் அடிச்சொல்லுடன் பன்மைகாட்டும் ஈறு இணைந்த பின் ஒருமையில் உள்ளதுபோன்றே உருபேற்கும்.

3.) தமிழிய அஃறிணைப் பெயர்கள் மிக அருகியே பன்மைப் படுத்தப்படுகின்றன. படர்க்கைப் பன்மை வினைமுற்றுகளில் அதனிலும் அரிதாகும்.

4.) தமிழியக் கொடைவேற்றுமை உருபு கு, கி, அல்லது கெ, சமற்கிருதத்தில் அல்லது இந்தோ–ஐரோப்பிய மொழிகள் ஏதாவது ஒன்றில் காணப்படும் கொடைவேற்றுமை உருபுகளோடு எவ்வகை ஒப்புமை கொண்டதாக இல்லை. ஆனால் இது கீழைத் துருக்கி, பெயிசுதான் சித்தியன் எழுத்துருவத் தகடு (tablet), பின்னிசு குடும்பத்தைச் சார்ந்த பல மொழிகள் ஆகியவற்றில் உள்ள கொடைவேற்றுமை உருபைப் போன்று உள்ளது.

5.) இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் முன்னுருபுகளாக வருவன போன்றில்லாமல் திராவிட மொழிகளில் சித்திய மொழிகளைப்போன்று பின்னுருபுகளாக வருகின்றன. பின்னுருபுகளாக வருபவை தனியான இலக்கண வகையாக அமைவது இல்லை. உறவும், பண்பும் குறித்த பெயர்களான அவை துணைச்சொற்களாகக் கையாளப்படு கின்றன. அனைத்து வினை அடைகளும்பெயர்களாகஅல்லதுதொடரெச்சங்களாக அல்லது வினையெச்சங்களாக இருக்கும். இவை பண்பேற்கும் வினைக்கு முன் இடம்பெறும்.

6.) சமற்கிருதத்திலும் இந்தோ–ஐரோப்பிய மொழிகளிலும் பெயரடைகள் பெயர்களைப்போல வேற்றுமைப்பாடு அடைகின்றன. அவை எப்பெயர்களுக்கு அடைகளாக வருகின்றனவோ அவற்றின் பால், எண், இடம் ஆகியவற்கேற்ப மாறி சேர்கின்றன. சித்திய மொழிகளில் உள்ளது போன்று தமிழிய மொழிகளில் பெயரடைகள் வேற்றுமைப்பாடு அடையும் திறத்தனவல்ல. பெயரடைகளைத் தனியாகப் பண்புப்பெயர்களாகப் பயன்படுத்துவது தமிழியப் பெயரடையின் மூலமும் இயல்பான பண்புநலமும் ஆகும். அப்பொழுது அவை ஏனைய பெயர்களைப்போல் வேறுபாடு அடையும். ஆனால் அவற்றைப் பெயர்களைச் சிறப்பிக்க வரும் பெயரடைகளாகப் பயன்படுத்தும்போது எவ்வகை வேறுபாடும் அடைவது இல்லை. அவை தாம் சிறப்பிக்க வரும் பெயர்கள் முன் இணைக்கப்பெறும்.

7.) மங்கோலியம், மஞ்சு, சித்திய மொழிகள் பலவற்றில் உள்ளன போன்றும் இந்தோ–ஐரோப்பிய குடும்ப மொழிகளுக்கு மாறான வகையிலும் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் பெயரின் பண்பு குறித்துவரும் பெயர்களை மேற்கொள்வதற்கு மாற்றாக வினையின் பெயரெச்ச வடிவங்களைப் பெயரடைகளாகப் பயன்படுத்துவது இந்த மொழிகளின் இயல்பாக உள்ளது. இப்போக்கின் பயனாகப் பண்பு குறித்து வரும் பெயரைப் பயன்படுத்தும்போது பொதுவாகப் பெயரெச்ச வடிவங்களின் ஆக்க ஈறுகள் அவற்றுடன் இணைக்கப்படுகின்றன. இந்த ஈறுகள் மூலம் அவை பெயர் வினை ஆகியனவாகப் பயன்படுத்தும் இயல்பு பெறுகின்றன.

8.) தன்மைப்பன்மையில் இரண்டு பகரப்பெயர்கள், ஒன்று யாரிடம் பேசுகிறோமோ அவரை உளப்படுத்துவது மற்றொன்று உளப்படுத்தாதது பல சித்திய மொழிகளில் இருப்பது போன்று தமிழிய மொழிகளில் காணப்படுவது, ஒரு சிறப்புக்கூறு ஆகும். இது சமற்கிருதம், இந்தோ–ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றில் அறியப்படாத ஒன்றாகும். இந்த மொழிகளில் இது போன்று காணப்படுவது அங்குள்ள இருமை ஆகும்.

9.) தமிழிய மொழிகளில் செயப்பாட்டு வினை இல்லை. செயப்பாட்டு வினை படு என்பது போன்ற துணைவினைகளால் பெறப்படுகிறது.

10.) தமிழிய மொழிகள் இந்தோ–ஐரோப்பிய மொழிகளிலிருந்து வேறான, சித்திய மொழிகளைப்போன்று எண்ணிடைச்சொற்களை இணைப்பிடைச்சொற்களாகப் பயன் படுத்த முன்னுரிமை அளிக்கின்றன

11.) இந்த மொழிகளின் வினையமைப்பில் உடன்பாடு எதிர்மறை ஆகியன இருப்பது சமற்கிருதத்திற்கும் இம்மொழிகளுக்கும் இடையே நிலவும் இன்றிமையாத மற்றொரு வேறுபாட்டைக் காட்டுகிறது. அதேநேரத்தில் இது இம்மொழிகளுக்கும் சித்திய மொழிகளுக்கும் இடையேயான ஒரு ஒப்புமைப் பண்பையும் காட்டுகிறது.

12.) இம்மொழிகள், மங்கோலியம், மஞ்சு ஆகிய மொழிகளிலும் மாறிய தன்மைகளில் வேறு பல

சித்திய மொழிகளிலும் உள்ளது போன்று இணைப்பிடப் பெயர்களுக்கு மாற்றாகப் பெயரெச்சங்களைப் பயன்படுத்துகின்றன. இது குறிப்பிடத்தக்க சிறப்புக்கூறு ஆகும். கோண்டு மொழியைத் தவிர்த்து வேறு எந்தத் தமிழிய மொழியிலும் இணைப்பிடப்பெயர் இருந்ததற்கான தடயம் எதுவும் இல்லை. கோண்டு தன் பெயரெச்சத்தை விட்டு அதற்கு மாற்றாக இந்தியின் இணைப்பிடப்பெயரைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. திராவிடமொழிகளில், இவ்வாறான பகரப்பெயர் வருமிடங்களில் மேலே குறிப்பிட்டது போல் சித்திய மொழிகளில் உள்ளதுபோன்று வினைகளின் நிகழ்காலம், இறந்தகாலம், வருங்காலம் வடிவங்களுடன் உடைமைப் பொருள் வேற்றுமை உருபுக்கு ஒப்பான ஆக்க ஈறு இணைந்து பெயரெச்சங்கள் உருவாகின்றன. இப்படி 'the person who came' தமிழில் வந்த–ஆள், நேர்ப்பொருள் 'the who–came person'; வந்த்–உ, இறந்தகால வினையெச்சம் 'having come' எனப் பொருள்படுவது, பழைய உடைமை உருபாகவும் பெயரெச்ச ஈறாகவும் உள்ள–அ வை இணைத்து பெயரெச்ச வடிவமாக (வந்த) 'the who–came' என்பதற்கு இணையானதாக மாற்றப் படுகிறது.

13.) அவாவ இடம்தரும் சொல்லின் நிலை இம்மொழிகளின் தனித்தன்மைகளைக் காட்டும் வகையில் இருக்கின்றது. பொதுவாக இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் இது அவாவி நிற்கும் சொல்லிற்கு முன்னர் வரும். திராவிட மொழிகள், சித்திய மொழிகள் ஆகியவற்றில் எல்லா இடங்களிலும் இது பின்னர் இடம்பெறும். இதன் விளைவாகத் எழுவாய் எப்பொழுதும் சொற்றொடரியத்தின் முதலிலும், பயனிலை இறுதியிலும் இடம்பெறும். பெயரடை பெயருக்கு முன்னர் வரும். வினையடை வினைக்கு முன்னர் வரும். எழுவாய் தன்னைச் சிறப்பிக்க வரும் எல்லாவற்றுடனும் வினைமுற்றுக்கு முன்னதாக வரும். பெயரெச்சம் அது சார்ந்து நிற்கும் பெயருக்கு முன்னதாக வரும். சொற்றொடரியத்தில் எதிர்மறை உடன்பாட்டிற்கு முன்னதாக வரும். நான்காம் வேற்றுமையுருபுடன் இருக்கும் பெயர் அது அவாவி நிற்கும் சொல்லுக்கு முன்னர் வரும். முன்னிடைச்சொல் அவாவி நிற்கும் தன்மையைப் பொறுத்து பின்னிடைச் சொல்லாக வரும். இறுதியாகச் சொற்றொடரியம் அனைத்தையும் அவாவும் வகையில் பயனிலை இறுதியாக வரும். சொற்றொடரியத்தின் இந்த இன்றியமையாயான, சிறப்புத் தன்மையான பண்புகள் தமிழிய மொழிகளும் சித்திய மொழிகளும் முழுமையாக ஒப்புமையுடை யனவாக இருக்கின்றன."

ஒப்பிலக்கணம்

ஒப்பியன் மொழியியல் (comparative linguistics) என்று இப்பொழுது குறிப்பிடப்படும் மொழியியல் பிரிவு முன்னர் ஒப்பிலக்கணம்(comparative grammar) என்று அழைக்கப்பட்டு வந்துள்ளதைக் கொண்டே இத்துறைக்கு இலக்கணத்தின் கட்டாயத்தேவை காட்டப்பட்டுள்ளது எனலாம். கால்டுவெல்லும் தம் நூலுக்குத் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்று பெயர் வைத்துள்ளது நினைவு கூரத்தக்கது. சொற்கடனைப் பற்றிக் குறிப்பிடும்போது முன்னர் சமற்கிருதத்திலிருந்து தமிழிய மொழிகள் கொண்டனவற்றையே பெரும்பாலும் குறிப்பிட்டு வந்துள்ளனர். ஆனால் அண்மைக் காலங்களில் அறிஞர்கள் தமிழிலிருந்து சமற்கிருதம் கடன்கொண்டவற்றைத் தெளிவாக்கி வருகின்றனர். இன்னும் இத்துறையில் தெளிவாக்க வேண்டியவை நிரம்ப உள்ளன. இது எவ்வாறு இருந்தாலும் சமற்கிருதத்திலிருந்து வேறுபட்டு இருப்பதற்குத் தமிழியக் குடும்ப மொழிகளின் இலக்கணமே முதன்மையானது.

குறிப்புதவி நூல்கள்:

1.) பாவாணர் (ஞா.தேவநேயப் பாவாணர்) 2001, ஒப்பியன்மொழிநூல், தமிழ்மண் பதிப்பகம், சென்னை (முதற்பதிப்பு 1940)

2.) Berriedale Keith, A., 1973, A History of Sanskrit Literature, Oxford University Press, Delhi, First Published 1920

3.) Burrow, T., The Sanskrit Language, 2001, Motilal Banarsidass Publishers Private Ltd. New Delhi (First Edition 1955 UK)

4.) Caldwell, Robert, 1987, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES, New Delhi (First published 1913)

5.) Max Muller, 1965, Lectures on The Science of the Language, Munshi Ram Manoharlal , New Delhi (First published 1861)

நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்... தொடர்ச்சி

இரா. திருமாவளவன்
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

வடக்கும் தெற்கும் இரு மரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்ற சொற்களென முன்பே கண்டோம்.

ஆலமரம் எனும் வட்ட மரம் வடமராகி அதுவே வட திசைக்குப் பெயராயிற்று என்பார் பாவாணர். அதே போல் தென்னை மரமே தென் திசைக்குப் பெயரமைய மூலமாயிற்று என்றும் கூறியுள்ளார். இவ்விரு மரப்பெயர்களும் வளைவுப் பொருள் வேரினின்று உருவானவையாகும்.

உல் = வளைவுப் பொருள் வேர்.
உல்> வள் > வளைவு
வள்> வட்டு
வட்டு > வட்டம்
வட்டம் > வடம்
வடமரம் = வளைவான ஆலமரம் .
இங்கு ஆலமரமானது அகன்று விரிந்து வட்டமாய் இருப்பது. அகல் என்பது ஆல் எனத் திரியும். அகலம்> ஆலம் என மாறியது. அகன்று விரிந்து .

உத்தரம் எனுஞ் சொல்லும் வடக்கை குறித்த சொல்லே. இச்சொல் வடசொல் என்றே கருதப்பட்டது. ஆனால் வேர்ச்சொல்லை ஆய்கையில் இதுவும் தமிழின் வேரினின்றே உருவாகியதென்றே தெளிவாகியது.

உல் = முன்னுறுதல் பொருள் வேர்
உல் > உய் > உயர்= முன்னுற்றுச் செல்வது, நிமிரின் மேலுயரும்.
உல் > உத்தடம் > உத்தரம் = மேலுயர் பகுதி, உயர் நிலம். இமயம் வடதிசையில் உயர்ந்திருப்பதால் உயர்வு பொருளில் அமைந்த உத்தரம் வடதிசையையும் குறிக்கலாயிற்று. மலாய் மொழியில் உத்தாரா, utara எனில் வடக்கு எனப் பொருளாகும்.

உத்தரம் (பெ) 1. வட நாடு: "ஓங்கு நீர் வேலி உத்தரம் மரீஇ" (சில:26:179).
2. வடக்கு: "வெந் திறல் வேந்தன் பைந் தொடியோடும் உத்தர கோணத்து அத் தக அமைத்த" (பெருங்:61:120–1).
3. ஊசல் தொங்க விட்ட கழி: "ஒட்டிய வனப்பின் ஓர் ஓட உத்தரத்து ஒண் மணிப் புதவின் திண்ணிதின் கோத்த" (பெருங்: 64:70–1).
4.,வடவை ஒளி / வடவாக்கினி : "வடவை தீத்திரள் மடங்கல் ஊழித்தீ கடையனல் உத்தரம் வடவாக்கினிப் பெயர்" (நிக.பி:1:45).

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் தம் வடமொழி வரலாற்றில் , பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

உத்தரம்'– உத்தர (இ.வே.)
உத்தரம் = 1. குமரிமலை முழுகியபின் உயர்ந்த வடக்குத்திசை (திவா)

"Uttara, "northern (because the northern part of India is high)" மா.வி. அகரமுதலியும் கூறுதல் காண்க.

2. தலைக்கு மேலுள்ள முகட்டு விட்டம்.

உ = உயர்ந்த, தரம் = நிலைமை.

வடமொழியாளர் உத்+தர என்று பகுத்து, தர என்பதை உறழ்தர (comp.degree) ஈறாகக் காட்டுவர். அங்ஙனங் காட்டினும், உத் என்பது உயர்வு குறித்த தமிழுகரச் சுட்டினின்று தோன்றியதே. மேலும், உத்தர தேசம், உத்தர மடங்கல், உத்தர மதுரை முதலிய சொற்களில், உறழ்தரக்

கருத்தின்மையையும் நோக்குக.

உத்தரம் – உத்தர

உ = உயர்ந்த., தரம் –நிலைமை

உ = மேல், பின். தரம் = தருவது. உத்தரம் – உத்தரவு = மறுமொழி. உத்தரவு என்னும் வடிவம் தருகைப் பொருளைத் தெளிவாய்க் காட்டுதல் காண்க. ம. உத்தரவு, தெ. உத்தருவு.

தமிழில் உகரச் சுட்டே உயரத்தைக் குறிக்கும்.

"உப்பா லுயர்ந்த வுலகம் புகும்" (நான்மணி.27)

"உப்பக்கம் நோக்கி யுபகேசி தோண்மணந்தான்"
என்னும் திருவள்ளுவ வெண்பாமாலை யடியிலும், உப்பக்கம் என்பதற்கு (உயர்ந்த) வடதிசை என்று பொருளுரைப்பதே சாலச் சிறந்ததாம்.

என்பது பாவாணர் உத்தரவு குறித்து வழங்கிய விளக்கமாகும்.

ஆங்கிலத்தில் வடக்கு என்பதற்கு north எனுஞ்சொல் வழங்கப்படுகின்றது.

Old English norð– (in compounds) "northern, lying to the north" (adj.); norð (adv.) "northwards, to the north, in the north;" from Proto–Germanic *nur–tha–(source also of Old Norse norðr, Old Saxon north, Old Frisian north, Middle Dutch nort, Dutch noord, German nord), which is probably an IE word, but of uncertain origin.

It might be ultimately from PIE *ner– (1) "left," also "below" (source also of Sanskrit narakah "hell," Greek neretos "deeper, lower down," enerthen"from beneath," Oscan–Umbrian nertrak "left"), as north is to the left when one faces the rising sun. The same notion apparently underlies Old Irish tuath "left; northern;" Arabic shamal "left hand; north.

என ஆங்கில வேர்ச்சொல் விளக்கம் காட்டும். கிழக்கு நோக்கி முகம் பார்த்து நிற்கும் வேளை நம் இடப்புறம் வடக்காகவே இருக்கும். மேலையர்க்கு north நோர்த் எனும் இச்சொல் இடப்பக்கம் என்ற பொருளையும் மிகு தாழ்ச்சி என்ற பொருளையும் வழங்கும். Ner எனும் இந்தோ ஐரோப்பிய வேர் இடம், தாழ்வு எனும் பொருளை வழங்குவதாக மேற்கண்ட விளக்கத்தில் காணலாம்.

தமிழில் உல் எனும் மூல வேர் நகர ஒற்று சேர்ந்து நுல் என வழங்கும். நுல் வழங்கும் பல்வகைப் பொருள்களுள் துளைத்தல் பொருளை இவ்விடத்தில் பொருத்திப் பார்ப்பது சாலச்சிறந்தது.
துளைக்கப்படுவது பிளக்கும்; பிளக்கப்படுவது சிறுக்கும். நுல் > நுறு > நூறு = அழித்துச் சிதை , சுக்குநூறு
நுறு > நொறு > நொறுக்கு = சிதைவுபடுத்து
நுல் > நர் > நருக்கும் = நொறுக்கும்

"நகத்தினால் உயர் நகங்களை நருக்குமா போலே" (வி. பா: 22:17)

நர்> நருக்கி = கொன்று

"நட்பு அகத்து இலா அரக்கரை நருக்கி" (யுத்: 41:35)

நுல் > நொல் > நொய் = சிதைக்கப்பட்ட அரிசி
நொய்> நோய் = உடலைத் துன்புறச் செய்யும் வருத்தம்
நுல் > நொலி > நலி = சிதை , நலிதல்
நொலி > நொடி = பொருளியல் சிதைவு , உடல் வருத்தம் , நுணுகிய பொழுது , விரல் நொடிப்பு
நுல் > நில் > நிரயம் = துன்புறுத்தும் ஆழிடம் , நரகம் எனும் கற்பனை உலகம்.
நுல் > நல் > நர்> நரகு > நரகம் = மறைந்த பின் கொடுந்துன்பத்தைத் தரும் கற்பனை உலகம்.

நரகக் குழி (பெ) தீ வினைப் பயன் துய்க்கும் இடம்: "அரன் பொற் கழல் உள்ளிருக்கும்

உணர்ச்சி இல்லாதவர் நள்ளிருப்பர் நரகக் குழியிலே" (நாவுக்கரசர்: 5:79:1).

நரக கோபுரங்கள் (பெ) நரகத்துக் கோயில்கள்: "மையல் விளை மா நரக கோபுரங்கள் கண்டீர்" (சீவ: 13:271).

நரகதர் (பெ) 1. நரகத்தை அடைந்த பாவிகள்: "நரகதர்க்கு அறம் நல்கும் நலத்த நீர்" (அயோ:14:16). 2. மக்கள்: "நரகதர்க்கு அறம் நல்கும் நலத்த நீர்" (அயோ: 14:16).

நரக நோய் (பெ) துன்புறு நோய், துன்பம் : "நரக நோய் யாதநை " (நிக.தி:8:150).

நரகம் (பெ) கரிசிழைத்தார், பாவிகள் இறந்தபின் அடையும் துன்ப உலகம்: "கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்" (நாவு:4:38:10).

நரகர் (பெ) 1. வெறுப்பானவைகளையே செய்யும் கீழ் மக்கள்: "வெறுப்பனவே செய்யும் நரகர்கட்கு இல்லையோ நஞ்சு" (பழ:27).
2. மக்களில் இழிந்தவர்: "ஞமன் என்பான் நரகர்க்கு நமக்கு எலாம் சிவன் என்பான்" (நாவு:5:97:18).
3. முன்னர்ப் பொறி அடக்கம் இலராய்த் தீ வினையைப் புரிந்தவர்: "எரி நுனைச் சுரிகை கூட நட்டவை நிரைத்த பூமி நவையுடை நரகர்" (சீவ:13:166).
4. பலகறையை ஒத்த பல்லினையும் பசுங் கழற்சிக் காய் போன்ற கண்களையும் உடையவர்: பைங் கண் உறு துயர் நரகர் தம்மை உருகச் சுட்டிடுங்கள் "பறையலகு அனைய வெண் பற் பசுங் கழல் குண்டு அன்றே" (சீவ:13:175).

நரகன் (பெ) கீழோன்: "நரகன் உயிர்க்கு நல் உயிர் கொண்டு பர கதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை" (சில: 15:84–5)

நரகினர் (பெ) பாவிகள்: "பெருந் தண்டு ஏந்திய கரதலத்து அண்ணலைக் கண்ணின் நோக்கிய நரகினர் ஆம் என" (ஆர:10:11).

நரகு (பெ) 1. பொய் முதலிய கரிசுகளைச் செய்த அற்ப குணம் உடையோர் (பாவிகள்) தங்குமிடம்: "பொய் கிளர் வன்மையில் புரியும் புன்மையோர் வைகுறும் நரகையும் நகும் வயிற்றினான்" (ஆர:15:16).
2. தென் புலத்தில் உள்ளதோர் நரகம்: "தென் புலந் தங்கு எரி நரகில் சிந்திய என்பு இல் பல் உயிர் என வெம்மை எய்தினார்" (கிட்:14:21).

நுல் துளைப்புப் பொருளை உணர்த்துவதால் நரகம் ஆழத் துளைக்கப்பட்டு ஆன பாதாள உலகத்தையும் குறித்தது. அதில் விழுந்தால் மீள முடியாமல் துன்புறவே நேரும். எனவே துன்ப உலகமாய் நரகம் ஆனது.

இதன் வழி நரகம் தமிழ்ச்சொல்லெனவே புலப்படும். இதனை அளறு, நிரயம் எனவும் கூறினர்.

நிரயம் (பெ) நரகம்: "நிரம்பா நோக்கின் நிரயம் கொண்மார்" (அக:64:6).

தமிழின் நுல் > நுர் > நர் > நரகம்
நுல்> நுர்> நிர்> நிரயம்

எனும் சொற்களின் வேரான நுல்> நுர் எனும் தமிழ் வேருக்கும் நோர்த் north எனுஞ் சொல்லின் வேரான ner என்பதற்கும் தொடர்பிருப்பதாகவே நான் கருதுகின்றேன். மலாய் மொழியில் நரகம், நெராக்க neraka என வழங்குகின்றது. அறியாதார் இது சங்கதத்தின் தாக்கம் என்பர், ஆனால் இச்சொல் தமிழ்வழியே மலாய்க்கும் சென்றது.

தொடரும்...

மஸ்து !

முனைவர் ஆ. அரிமாப்பாமகன்
மேனாள் ஆங்கில விரிவுரையாளர்
புதுச்சேரி

"மஸ்து மஸ்து – இது
மதுரகார மஸ்து
கொஸ்து கொஸ்து – இது
கத்திரிக்கா கொஸ்து"
(வாலி, திருமூர்த்தி).

****

pneumonoultramicroscopicsilicovolcanoconiosis – மிக நீளமான ஆங்கிலச் சொல்.
இதுஒரு வகை நுரையீரல் நோயைக் குறிப்பது.
இதை ஒரே சொல்லாக மருத்துவ உலகம் குறிப்பிட்டாலும்
pneumono ultra microscopic silico volcano coniosis
என ஆறாகப் பிரித்தே பொருள் காண முடியும்.
(45 எழுத்துகள்).

அடுத்ததாகச் சேக்சுபியர் பயன்படுத்திய நீளமான சொல் (27 எழுத்துகள்):
"O, they have lived long on the alms–basket of words,
I marvel thy master hath not eaten thee for a word;
for thou art not so long by the head as
honorificabilitudinitatibus: thou art easier swallowed
than a flap–dragon."
(Loves Labour Last: V, 1).
honorificabilitudinitatibus (med. Latin) = the state of being able to achieve honours.

தமிழில் ஒரு சொல்லில் ஐந்து, ஆறு எழுத்துகளே அதிகம்!
காப்பியன், வள்ளுவன், மருத்துவன்...
நீளமாக இருந்தால் ஓரிரு சொற்களின் கூட்டாக இருக்கும்.
சிலப்பதிகாரம் = சிலம்பு + அதிகாரம்.
ஆகவே, போலிக்கு இலக்கண வரையறை கூறி வகைசெய்யும் போது மூன்றெழுத்துச் சொற்களைக்கொண்டு முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி, முற்றுப்போலி என்று எளிமையாகக் கூறிவிடுகின்றனர்.

போலி = ஒரு சொல்லில் ஓரெழுத்துக்கு மாற்றாக ஏறத்தாழ ஒலி ஒப்புமையுடைய வேறோர் எழுத்து வருவது; ஆனால், பொருள் மாறாது.

முதற் போலி: மஞ்சு – மைஞ்சு,
நாண் – ஞாண்.
இடைப் போலி: அரசு – அரைசு,
நெயவு – நெசவு.
கடைப் போலி: குடல் – குடர்,
சாம்பல் – சாம்பர், பந்தல் – பந்தர்.
மூன்று எழுத்துகளும் போலியாக வருவது முற்றுப்போலி எனப்படும்.
எடுத்துக்காட்டாக: ஐந்து – அஞ்சு.

[அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை!
வங்கியில் ஆக் கடன் (பசு மாட்டுக் கடன்) வாங்கிய ஒருவர் கடனைத் திருப்பிக் கட்டவே இல்லை. மேலாளர் கேட்கும்போதெல்லாம்,
"அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை!,
அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை!"
என்றே விடை கூறினார்.
ஒன்றும் புரிந்துகொள்ள முடியாத மேலாளர் ஒருநாள், அது என்ன, அஞ்சுக்கு இரண்டு புதிர்? சற்றே விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றார்.
அவர் சொன்னார்: ஓர் ஆன் "பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் (கோமியம்) தரும். ஐந்தும் தந்தால் தான் நான் கடனை அடைக்க முடியும்.
நான் வாங்கியது கடைசி இரண்டு மட்டும் பழுதில்லாமல் தருகிறது!
நான் எப்படிக் கடனை அடைக்க முடியும்?
அதுதான் 'அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை! ']

"அஞ்சிலே ஒன்று பெற்றான்; அஞ்சிலே
ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு
அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றைவைத்தான்; அவன் எம்மை
அளித்துக் காப்பான்" (கம்பன்).
1. காற்று 2. கடல் 3. வான் 4. மண் 5. தீ.

மைந்து = வலிமை.
"தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப."
(தொல்காப்பியம், பொருளதிகாரம்: 70).

மைந்தன் = மகன்,
"குலக்கோ மைந்தர் தமக்கும்"
(கம்பரா. மந்தரை சூழ்ச்சிப் படலம்: 76).

"கஞ்சத்துக் களிக்கும் இன் தேன் கவர்ந்து
உணும் வண்டு போல,
அம் சொற்கள் கிள்ளைக்கு எல்லாம் அருளினாள்
அழகை மாந்தி,
தம் சொற்கள் குழறித், தம் தம்
தகை தடு மாறி நின்றார் –
மஞ்சர்க்கும், மாத ரார்க்கும்,
மனம் என்பது ஒன்றே அன்றோ?"
(கம்பராமாயணம், கோலம்காண் படலம்: 19).
மஞ்சர் = மைந்தர், முற்றுப் போலி.
சீதையின் அழகெலாம் ஒருங்கே கண்டால்

ஆடவர் மட்டுமா மயங்குவர்? மகளிரும் மயங்குவர்! இருவருக்கும் மனம் என்னும் பொறி ஒன்று தானே!
(அடடா, கம்பா! சரியான வம்பா!)

இதில் மயங்கிய கண்ணதாசன்:
"கண்ணாடி முன்னால் நில்லாதே – உன்
கண்ணாலும் உன்னைக் காணாதே!
மங்கை உன் அழகை மாதர் கண்டாலும்
மயங்கிடுவார் கொஞ்ச நேரம்! – இந்த
மானிடர் உலகில் வாழ்கிற வரைக்கும்
தனியே வருவது பாவம்"

மைந்து விரட்டு = மஞ்சு விரட்டு!
(வலிமையை எண்பிக்கும் மாடுபிடி திருவிழா).

ஐ = வலிமை, வலிமை மிக்க தலைவன்.
"என் ஐ முன் நில்லன்மின் தெவ்விர் பலர் என் ஐ முன்நின்று கல்நின் றவர்." (திருக்குறள்: 771).

பொருள்: பகைவரே! என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நிற்காதீர்கள், என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நின்று (நடு)கல்வடிவாய் நின்றவர் பலர்.
தலைவனைக் குறிப்பதால் ஐ என்பதற்கு வலிமை எனப் பொருள் கொள்ளலாம்!

ஐ – மை – மைது – மைந்து – மைத்து – மத்து – மஸ்து – மதம்!
'கட்டுமஸ்தான உடம்பு' – பேச்சு வழக்கு.
வேட்டி – வேஷ்டி, முட்டி –முஷ்டி,
குத்துச்சண்டை – குஸ்திச் சண்டை ஆனது போல மத்து – மஸ்து ஆகி இப்போது தெலுங்கில் பயன்படுகிறது..

மைந்து – மத்து – மதம் = வலிமை!
"முத்தக நிறைந்தமுளை எயிற்றுமத யானை
மத்தகமுந் திருமகள்தன் வடிவுபட மாதோ
ஒத்தகலம் எண்முழமென் றோதிநக ரிழைத்தார்
மொய்தெரிசெம் பொற்றுகளி னூன்முடிவு
கண்டார்." (சீவகசிந்தாமணி: 2485).

பொருள் : இருபுறத்தும் மதயானைகளை நிற்ப இடையே திருமகளுருவம் அமையக் கோலஞ் செய்தார்.
மதம்பிடித்தல் = வலிமை மிக்குத் திமிர்தல்.

மதம் – மதன் (அறம் – அறன், போலக் கடைப்போலி) = வலிமை.
"மன்னெயில் கதுவு மதனுடை நோன்தாள்
மாத் தானை மற மொய்ம்பின்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கி"
(பட்டினப்பாலை: 278–279).
மதன், நோன் = வலிமை.

"மதனுடை முழவுத்தோள் ஓச்சித், தண்ணென
வீசி யோயே; வியலிடம் கமழ,
இவன்இசை உடையோர்க்கு அல்லது, அவனது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்:
வலம்படு குருசில்! நீ ஈங்குஇது செயலே?"
(புறநானூறு: 50).
மதனுடை முழவுத் தோள் = வலிமையுடைய முழவு போன்ற தோள்கள்.

மதன் – மன்மதன்,
(நிலையான வலிமையுடையான்).

மதம் – மத்தம்,
"மத்தக் கரியுரி யோன்தில்லை
யூரன் வரவெனலும்
தத்தைக் கிளவி முகத்தா
மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்கும் கழுநீர்
விருந்தொடென் னாதமுன்னம்
இத்தக் கருங்குவ ளைச்செவ்வி
யோடிக் கெழுமினவே"
(திருக்கோவையார்: 388).
மத்தக் கரி உரியோன் = மத யானையின் தோலை அணிந்த சிவபெருமான்.
உரி = (உரிக்கப்பட்ட) தோல்.

மத்தம் – உன்மத்தம் = அதிக மதமான வெறி.
"கன்னத்தில் முத்தமிட்டால், உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடி!
உன்னைத் தழுவிடிலோ, கண்ணம்மா
உன்மத்தம் ஆகுதடி!" (பாரதியார்).

உன்மத்தம் > ஊமத்தம் (ஊமத்தன், ஊமத்தை).
இந்த ஊமத்தன் இலைகொண்டு செய்யப்படும் எண்ணெய் 'மத்தன் தைலம்'.
இலைச்சாறு, தேங்காய் எண்ணெய், மயில் துத்தம் (copper sulphate) சேர்த்துச் செய்யப்படும் மத்தன் தைலம் புண், புரைகளை நீக்கும். நீரிழிவு நோயில் ஏற்படும் ஆறாப் புண்களைக் குணப்படுத்தும்.

நாய்க்கடியால் ஏற்பட்ட புண்ணுக்கு ஊமத்தையிலிருந்து சிறந்த மருந்து ஆக்கப்படுகிறது.

கடைப்போலியைப் பயன்படுத்தினால்,
மைந்து – மைத்து – > might – mighty!

might (n.)
"quality of being able, ability to do or act, power," Middle English might, from Old English miht, earlier mæht "bodily strength, power; authority, dominion, control; ability," from Proto-Germanic *makhti- (source also of Old Norse mattr, Old Frisian, Middle Dutch, Dutch macht, Old High German maht, German Macht, Gothic mahts), a Germanic suffixed form of the PIE root *magh- "to be able, have power."

பனிநீர்க் கலனும் வெந்நீர்க்கலனும்

இலக்குவனார் திருவள்ளுவன்
தலைவர் – தமிழ்க் காப்புக் கழகம்

பழந்தமிழகத்தின் கட்டடக்கலை குறித்த பல்வகை இலக்கியக் குறிப்புகளையும் நெடுநல்வாடை என்னும் இலக்கியம் ஒன்றிலேயே மிகுதியான குறிப்புகள் உள்ளன. நெடுநல்வாடையிலேயே மேலும் பல குறிப்புகள் உள்ளன. மலைகளைப் போன்று அகலமும் உயரமும் உடைய கட்டடம் என்பதை வரைகண்டன்ன தோன்றல் (நெடுநல்வாடை 108) என்கிறார் ஆசிரியர் நக்கீரர்.

வானளாவிய கட்டடங்களில் வானுலகைத் தீண்டும் வண்ணம் மிக உயர்வாக அமைந்த மேல்நிலை மாடம் குறித்து,

"வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்" (நெடுநல்வாடை : 60)

என்கிறார் ஆசிரியர் நக்கீரர்.

மழைமானி முதலான பல அறிவியல் செய்திகளும் இவற்றில் இடையிடையே கலந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு பருவ காலத்திற்கும் ஏற்றவகையில் கட்டடங்களை அமைத்த அறிவியல் செய்திகளும் உள்ளன. இளவேனில் காலத்தில் உறங்குவதற்கு ஏற்ற படுக்கையறையில் தென்றல் காற்று வீசுவதை

"வேனில் பள்ளி தென் வளி தரூஉம்

நேர் வாய் கட்டளை திரியாது"

(நெடுநல்வாடை 61–2)

என்கிறார் ஆசிரியர் நக்கீரனார்.

கட்டளை என்பது பலகணி அல்லது காற்றுமாடத்தைக் குறிக்கிறது.

குளிர்ந்த நீரைச் சேமித்து வைத்துக் குடிப்பதற்கான பனிநீர்க்கலனும் (ice–pot) குளிர்காலத்தில் பருகத்த வாயை உடைய

வெந்நீர்க்கலனும் (hot–pot) பயன்படுத்தப் பட்டமையை,

"கல்லென் துவலை தூவலின் யாவரும்

தொகு வாய் கன்னல் தண்ணீர் உண்ணார்

பகு வாய் தடவில் செந் நெருப்பு ஆர"

(நெடுநல்வாடை 64 66)

என்னும் வரிகளில் தெரிவிக்கிறார். கல்லென்கின்ற ஓசையினையுடைய சிறுதுவலையை வாடைக்காற்று எங்கும் பரப்பு கையினாலே இளையோரும் முதியோரும் குவிந்தவாயையுடைய செம்பாகிய குளிர்க்கன்னலில் தண்ணீரைக் குடிக்காமல் பகுத்தாற்போன்ற வாயையுடைய தூபக்கரண்டியாகிய இந்தளத்தில் இடும் சிவந்த நெருப்பின் வெம்மையைப் போன்ற வெந்நீரைப் பருகினர் என்பதை இவ் வரிகள் உணர்த்துகின்றன.

படுக்கை முதலான மனைப்பொருள்கள், கட்டில் முதலான இல்லணிகள் (furniture) ஆகியன குறித்தும் குறிப்புகள் உள்ளன. அரண் அமைப்பு மதிலமைப்பு முதலானவை குறித்தும் பல்வகைக் குறிப்புகள் உள்ளன. இவை குறித்துப் பின்னர்க் காணலாம்.

இலக்கியங்களிலேயே நம்மால்

எண்ணற்ற குறிப்புகளைக் காணமுடியும் பொழுது உரிய துறைநூல்களில் மிகுதியான அறிவியல் உண்மைகள் தெரிவிக்கப் பட்டிருக்கும் அல்லவா? இத்தகைய உண்மைகளை மேனாட்டு அறிஞர்கள் மேற்கொள்ளும் பல்வகைப்பட்ட ஆய்வு முடிவுகளும் நமக்கு உணர்த்துகின்றன. 1950களில் சோவியத்து நாட்டினர் குமரிக்கடலில் ஆழ்கடல் ஆராய்ச்சி மேற்கொண்டு கடலுள் முழ்கிய தமிழர் நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் அடைந்திருந்த சிறப்புகளை வெளிப்படுத்த முன்வந்தனர். மத்திய அரசு மறுத்து விட்டது. பண்டைத்தமிழர்களின் சிறப்புகளை வெளிப்படுத்திய ஆராய்ச்சி அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவரான, எடின்பரோவைச் சேர்ந்த கிரகாம் என்காக்கு (Graham Hancock) என்னும் தொல்லியல் ஆராய்ச்சியாளர், தம் சொந்தச் செலவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இப்போதைய பூம்புகார் நகரின் அருகிலேயே கடலில் 18 கல் ஆழத்தில் பழைய பூம்புகார் நகரம் புதையுண்டு உள்ளமை அறிய வருவதாகவும் சிதையாத கட்டடங்கள் கடலின்அடியில் உள்ளன என்றும் கி.மு.17,000 ஆண்டிற்கு முற்பட்ட தொன்மைச் சிறப்பு உடையன என்றும் வெளியிட்டார். தமிழ்நாட்டரசு, தமிழர்க்கு நலன் சேர்க்கும் வரலாற்று உண்மையையும் ஆழ்கடல் ஆராய்ச்சிகளையும் அகழ்வாராய்ச்சிகளையும் தொடர்ந்து உண்மைகளை வெளிக்கொணர முன்வரவேண்டும்.

நன்றி: அன்றே சொன்ன அறிவியல்

தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்பு – 20.02.2026

இன்சொல் எண்பதத்தை ஆகுமதி – புறநானூற்று ஆட்சி அறவியல்

பேரா. முனைவர் ப. கொழந்தசாமி,

அரசினர் ஆய்வு நிறுவனம், புதுச்சேரி.

மன்னராட்சிக் காலத்தில் இயற்றப்பட்டிருந்தாலும், புறநானூற்றுப் பாக்களில் நிலைபேறுடைய மானிட மதிப்புகளாக மக்களாட்சிக் கொள்கைகள் உரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மன்னன், தன்னை மக்கள் அணுகுவதற்கு வாய்ப்பளிப்பவராகவும் அணுகியோர்க்குத் தலையளி செய்பவனாகவும் திகழவேண்டும் என்பது அடிப்படையானது. செங்கோலாட்சி மக்கள் நல்வாழ்வை மையமிட்டதாக நடக்கவேண்டும் என்பதைப் புறநானூற்றுப் புலவோர் வலிமையாக வற்புறுத்தினர். அவற்றுள், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு ஆவூர் மூலங்கிழார் அறிவுறுத்திய, "இன்சொல் எண்பதத்தை ஆகுமதி பெரும !" (புறநானூறு பா 40 அடி 09) என்னும் சீருரை நோக்கத்தக்கதாகும். இதில் எண்பதம் என்பது எளிமையாக அணுகக்கூடியவர் என்று பொருள்படும். நாட்டின் பொருள் வளத்தோடு பொறுப்புணர்வும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இனிமையாக, பொறுப்பாகப் பேசுபவனாகவும் எளிதில் முறையிட வாய்ப்பு அளிப்பவனாகவும், மக்களின் குறைகளைக் களைபவனாகவும் அரசன் பொறுப்புணர்ந்து செயல்படவேண்டும். அதோடு திறனாளரைப் புரப்பவனாகவும் அறப்பணி ஆற்றுவானாகவும் மன்னன் ஆளவேண்டும்.

ஐ. நா. மன்றம் வகுத்த இன்றைய நல்லாட்சிக் கோட்பாட்டை இவண் ஒப்புநோக்கலாம்: "Good governance has 8 major characteristics. It is participatory, consensus oriented, accountable, transparent, responsive, effective and efficient, equitable and inclusive and follows the rule of law. It assures that corruption is minimized, the views of minorities are taken into account and that the voices of the most vulnerable in society are heard in decision-making. It is also responsive to the present and future needs of society". மேலும் ஆவூரார் வகுத்த நல்லாட்சி நாடெங்கும் நடைபெறக் கருத்துரைக்கின்ற பொறுப்பு ஆன்றோர்க்கும் திறனாளர்க்கும் அறிவாளிகளுக்கும் உண்டு என்பதும் இதில் உணர்த்தப்படுகின்றது. இவ்வாறு ஆட்சியாளர்களும் அறிவாளிகளும் கடமையுணர்வோடு இயங்கினால் குறையற்ற, வருத்தமில்லாத, நிறைவான வாழ்க்கை அனைவருக்கும் வாய்ப்பாகும்.

நன்றி: இணையத் தரவுகள்

அகரமுதலி இயக்கக நூல்கள் விற்பனை

தமிழ்நாடு அரசு

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
திருந்திய பதிப்பு !

A Comprehensive Etymological Dictionary of the Thamizh Language
Revised Edition

ஏழு மடலங்கள்

தமிழ் அகரமுதலி வரலாறு,
தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் அடங்கியது
பக்கங்கள் 8060 விலை உருபா 8,027/-

கழிவு 35% போக விலை உருவா 5,216/- மட்டுமே

குறிப்பு: தொகையைப் பணமாகவோ மின்னணு முறையிலோ (through ECS Payment) வழங்கலாம்.
“The Director, Directorate of Tamil Etymological Dictionary Project, Chennai - 600 028”

IFSC Code: IDIB000K204 Account No: 759144235 (Indian Bank)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
நகர் நிருவாக அலுவலக வளாகம் முதல்தளம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, மே.இரா.செ.நகர்,
சென்னை – 600028. தொலைபேசி: 044–29520509
மின்னஞ்சல் முகவரி: dir.dtedp@tn.gov.in வலைத்தளம்: www.sorkuvai.tn.gov.in

அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 199,200-ஆம் கூட்டங்கள்

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 199, 200ஆம் கூட்டங்கள் முறையே 17.02.2026, 25.02.2026 ஆகிய இருநாள்கள் நடைபெற்றன.

அகரமுதலி இயக்ககத்தில் நடைபெற்ற கூட்டங்களில், அலுவல்சாரா உறுப்பினர்களான புலவர் வெற்றியழகன், முனைவர் கு.பாலசுப்பிரமணியன், முனைவர் இரா.கு. ஆல்துரை, திரு. அ. மதிவாணன், அறிவியல் ஒளி ஆசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ்மொழி (ம) மொழியியல் புல உதவிப் பேராசிரியர் முனைவர் நா. சுலோசனா, தமிழார்வலர்கள் திரு. கோ.பிச்சை வள்ளிநாயகம், திரு. மு. இராசேந்திரன் மற்றும் அலுவல்சார் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இவ்விரு கூட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 267 தமிழ்க் கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது.

ஏற்பளிக்கப்பட்டுள்ள சொற்களுள் சில:

Allure Salon and Spa	பொலிவூட்டகம்
Anaplastology	ஐம்பொறிச் சீரமைப்பியல்
Beauty Buzz	ஈர்ப்புச் செய்தி
Belle Beauty	அணங்கு
Blunt cut	நேரிழை வெட்டு
Chemical peel	வேதிமுறைச் சீராக்கம்
Classy Curl	செவ்விய சுருள்முடி
Enchanted Elegance	சொக்கழகு
Fruit Enzyme	பழ நொதி
Glowing skin	மிளிர் தோல்
Lash Magic	இமை தீட்டல்
Superb Style	மீயுயர் பாங்கு
Tiny Tresses	குறுங்கூந்தல்
Five number summary	ஐந்து தரவுச் சுருக்க
Genomics	மரபணுத்தொகை
Linear association	நேரியல் தொடர்வு
Logical argument	ஏரணச் சொற்போர்
Mean Simple Arithmetic	எண்கணித நிரலளவு
misreading	புரிதல் பிழை
Nonresponse Bias	துலங்கா ஓரவாரம்
Quartile Upper	மேல் கால்மானம்
Optimum Sampling	உகந்த கூறெடுப்பு
Sound argument	வலுவான சொல்லாடல்
Uncontrolled Experiment	கட்டில்லா ஆய்வு
vital statistic	உயிர்நிலைப் புள்ளியியல்

அகரமுதலி இயக்ககத்தில் அகப்பயிற்சி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் அகப்பயிற்சித் திட்டத்தின்கீழ் (Internship programme), சென்னை – ஆவடி, புனித பீட்டர் உயர்கல்வி (ம) ஆராய்ச்சி நிறுவனத் தமிழ்த்துறை மாணவியர்க்குத் தூயதமிழ்ப் பயன்பாடு, தமிழ்க் கணியச்சு, கலைச்சொல்லாக்கம், மின் அகராதியின் தேவை, மொழிபெயர்ப்பு உள்ளிட்டவை குறித்துப் பயிற்சியளிக்கப்பட்டது.

09.02.2026 முதல் 27.02.2026 வரை நடைபெற்ற அகப்பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெற்ற மாணவியர்க்குப் பயிற்சியின் நிறைவில் அகரமுதலி இயக்கக இயக்ககத்தின் சார்பில் சான்றிதழ்களும் நூல்களும் வழங்கிப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

அகப்பயிற்சி நாள்களில், பதிப்பாசிரியர்கள் முனைவர் மா. பூங்குன்றன், 'சொற்பிறப்பியல் அகராதி' குறித்தும், முனைவர் தி. பாலசுப்பிரமணியன், 'மொழிபெயர்ப்பு' குறித்தும் பயிற்சியளிக்க, இயக்ககக் கண்காணிப்பாளர் திருமதி ஆ.மு.பிந்து மாணவ – மாணவிகளுக்குத் தமிழ்க் கணியச்சு, கணினி பயன்பாட்டிற்கான அடிப்படைச் செய்திகள் குறித்துப் பயிற்சியளித்தார்..

தொகுப்பாளர்கள் திரு. வே. பிரபு 'சொற்குவை' குறித்தும், திரு. கி. இராமர் 'அகராதியியல்' குறித்தும், திருமதி கு.சங்கீதா 'தமிழ்நாட்டரசின் தமிழ்வளர்ச்சி அமைப்புகள்' குறித்தும் எடுத்துரைத்தனர். முனைவர் வே. கார்த்திக் 'வேர்ச்சொல்லாய்வு' குறித்தும், திருமதி ஜெ. சாந்தி 'கலைச்சொல்லாக்கம்' குறித்தும் விளக்கமளிக்க, தட்டச்சர் திரு. சீ.ஸ்ரீகாந்த் அவர்கள், போட்டித் தேர்வுகள் குறித்த அடிப்படைச் செய்திகளை எடுத்துரைத்தார்.

நாளும் விளையும் சொற்கதிர்

நாளும் விளையும் சொற்கதிர்